

வேலூர் மாநகரம் மண்டலம் 4 கஸ்பா 41வது வார்டில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம் நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பல்வேறு சான்றிதழ் கோரி விண்ணப்பித்த பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் ரேகாஅன்புநிதி, ஆணையாளர், லட்சுமணன், பகுதி செயலாளர் தி.அ.முனவர்பாஷா மற்றும் மாணிக்கவாசகம், வே.கதிரவன், கோ.சரவணன், கே.அஸ்லாம்கான், அசோக்குமார், நிஜாமுதீன், சல்மான்கான் ராஜேஷ், பெருமாள், யூனிஸ்கான் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## உலகளவில் தொழில்புரிவதற்கு உகந்த மாநிலம்!

# முதல்வரின் முயற்சியால் முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் திகழும் தமிழ்நாடு!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 7 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தீவிர முயற்சியில் உலகளவில் தொழில்புரிவதற்கு உகந்த மாநிலமாகவும் முதலீட்டாளர்கள் முதல் முகவரியாகவும் தமிழ்நாடு விளங்கி வருகிறது என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு :-

2030 ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அதிவேக பாய்ச்சலில் பயணித்து வருகின்றார். உள்நாட்டு தொழில்துறை உற்பத்தியை அதிகரிக்க செய்யும் அதே வேளையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.



தினகரன்
செப்டம்பர் 6, 2025 சனிக்கிழமை
முதலீட்டாளர்கள் முகவரி
2030 ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிவேக பாய்ச்சலில் பயணித்து வருகின்றார். உள்நாட்டு தொழில்துறை உற்பத்தியை அதிகரிக்க செய்யும் அதே வேளையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.
தொழில் மயமாக்கலில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகின்றது. வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சியானது அனைத்து பகுதிகளிலும் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற தத்துவத்தை அடிப்...

தொழில் மயமாக்கலில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகின்றது. வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சியானது அனைத்து பகுதிகளிலும் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற தத்துவத்தை அடிப்படையாக கொண்டு கொள்கை திட்டங்கள் வகுக்கப்பட்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. இதன் காரணமாக தொழில்துறையில் மாபெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்றுமதியானது இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் உற்பத்தி துறை சார்ந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 11.90 விழுக்காடாக இருந்து வருகின்றது. மோட்டார் வாகன உற்பத்தி, ஆயத்த ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் முதலிடத்தையும், ஜவுளி, இயந்திரங்கள் மற்றும் மின்னணு பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. தமிழ்நாடு திறன்மிக்க பணியாளர்களை பெற்றிருப்பதால் பல வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது 25 முன்னணி நிறுவனங்களுடன் மேற்கொண்ட சந்திப்பின் மூலம் ரூ.7,618 கோடி மதிப்பிலான 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இதன் மூலம் தமிழ்நாட்டில் 11,516 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை ஏற்பட்டது. இந்த சூழலில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தற்போது இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டதன் மூலமாக தமிழ்நாட்டிற்கு ரூ.13,016 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

டிஎன் ரெயிசிங் ஐரோப்பா முதலீட்டு சந்திப்புகளின் போது, இந்துஜா குழுமம் தமிழ்நாடு அரசுடன் மின்சார வாகனம், பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தியில் மட்டும் ரூ.5,000 கோடிக்கு முதலீடு செய்திட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 1,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்துஜா குழுமத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ்நாட்டில் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்புகளை நிறுவிட இக்குழுமம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நிலையான இயக்கம் மற்றும் பேட்டரி தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய தலைநகராக தமிழ்நாடு உருவாக உள்ளது.

இதே போல கடந்த 2 ஆண்டுகளில் 3வது தொழில் முதலீட்டை அஸ்ட்ராஜெனகா நிறுவனம் அறிவித்துள்ளது. சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை (ஜி.ஐ.டி.சி.) ரூ.176 கோடி முதலீட்டில் வரிவாக்கம் செய்திட தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான முதலமைச்சரின் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கான பயணத்தால் தமிழ்நாட்டிற்கு என மொத்தம் ரூ.13,016 கோடிக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 17,813 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதல்வரின் தீவிர முயற்சியால் உலகில் உள்ள முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களது தொழில் முதலீடுகளை செய்து வருகின்றன. இதன் மூலம் உலக அளவில் தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாக மட்டுமல்லாது, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகவும் தமிழ்நாடு விளங்கி வருகின்றது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம், வருகிற 12.09.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் தொழிலாளர் அணி பொறுப்பாளர் திரு. ஆ.இராசா, எம்.பி., அவர்கள் தொழிலாளர் அணி வளர்ச்சி குறித்து சிறப்புரை ஆற்றிட, தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அவர்கள் தலைமையில் தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ச.இராஜேந்திரன், முனைவர் ஆர். வரதன், கோவை நா.தமிழ்செல்வன், சேலம் காசி, கரூர் விஜயகுமார், இராமேஸ்வரம் அ.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் பிடிசி வெ.பாலு அவர்கள் நன்றியுரையும் வரவேற்புரை மு.இராஜகாந்தம் அவர்கள் ஆற்றிட நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் தலைவர், துணைத் தலைவர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :** தொழிலாளர் அணி வளர்ச்சி குறித்து.

``அண்ணா அறிவாலயம்” **பி.டி.சி. ஜி.செல்வராஜ்,**
சென்னை18. செயலாளர்,
நாள்: 05-09-2025. தி.மு.க. தொழிலாளர் அணி.



திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் மூலம் ரூ.36 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் இரண்டு வகுப்பறை கட்ட ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் அடிக்கல் நாட்டினார். உடன் மாதனூர் ஒன்றிய பெருந்தலைவர் ப.ச.சுரேஷ்குமார், ஒன்றிய கழக செயலாளர் ராமமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரசியலமைப்புச் சட்ட உரிமையும், கடமையும்!

**அ**ரசியலமைப்புச் சட்டமோ இந்தியாவின் இதயம்!

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலோ ஒரு சந்தர்ப்பம்!.....

இந்திய நாட்டின் 14ஆவது குடியரசுத் துணைத் தலைவராக 2022 ஆகஸ்டில் பதவியேற்ற ஜெகதீஷ் தன்கர் கடந்த ஜூலை மாதம் 21 அன்று தனது உடல் நிலை காரணம் காட்டிப் பதவி விலகினார்.

ஜெகதீஷ் தன்கர் எங்கே இருக்கிறார்? என்று இது வரை எதிர்க்கட்சிகள் கேட்டு வந்த நிலையில், அவர் தனது சட்டமன்ற உறுப்பினருக்கான ஓயுதியத்தைக் கேட்டு அரசுக்குக் கடிதம் எழுதியதோடு, தற்போது, தான் தங்கியிருந்த அரசு இல்லத்தை விட்டு வெளியேறி உள்ளார். டெல்லி அருகே இடைக்காலமாகச் சந்தர்பூரில் உள்ள ஒரு பண்ணை வீட்டில் அவர் குடியேறி உள்ளார். அந்த வீடு அபய்சிங் சவுதாலாவுக்குச் சொந்தமானது. அவரின் தாத்தா தேவிலால் வி.பி .சிங் அமைச்சரவையில் துணைப் பிரதமராக இருந்தவர். அவர் மூலம் அரசியலுக்கு வந்தவர்தான் ஜெகதீஷ் தன்கர். 1989 ஆம் ஆண்டு இராஜஸ்தான் ஜூன் ஜூனு தொகுதியில் எம்.பி.யாகிய அவர்; ஒன்றிய அமைச்சருமானவர். மேற்குவங்க ஆளுநராகவும் பதவி வகித்தவர். தற்போது குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகி உள்ளார்.

இதையடுத்து, வரும் செப்டம்பர் 9அன்று 15ஆவது குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடக்க உள்ளது. கடந்த ஜூலை 7 முதல் 21 ஆம் தேதி வரை மனுதாக்கல் செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டது. “இந்தியா கூட்டணி” வேட்பாளராக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டியும், பா.ஜ.க. கூட்டணி சார்பில் சி.பி. இராதாகிருஷ்ணனும் ஆகிய இருவர் மட்டுமே தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் ஏற்கப்பட்டுக் களத்தில் நிற்கின்றனர்.

இந்திய நடைமுறைக்கு மாறாக, முன்கூட்டியே ஐந்தாண்டுகள் பதவி காலம் முடியும் முன்பு இது போன்ற குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் இரு முறை நடைபெற்றுள்ளன. வரதா கிரி வெங்கட கிரி எனும் வி.வி. கிரி (1967 1969) இரண்டு ஆண்டுகள் மட்டுமே குடியரசு துணைத் தலைவராகப் பதவி வகித்த அவர்; அதை விட்டு விலகிக் குடியரசுத் தலைவர் பொறுப்புக்குப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெற்றிடமான அந்தத் துணைக் குடியரசுத் தலைவர் பொறுப்புக்குக் கோபால் ஸ்வருப் பதக் எனும் ஜி.எஸ். பதக் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைப் போல இராமசாமி வெங்கட்ராமன் எனும் ஆர். வெங்கட்ராமன் (1984 – 1987) மூன்று ஆண்டுகள் மட்டுமே பொறுப்பு வகுத்து வந்த அவர்; அதிலிருந்து விலகிக் குடியரசுத் தலைவர் பொறுப்புக்குப் போட்டியிட்டார். பின்பு குடியரசு துணைத் தலைவராக அந்த இடத்தில் டாக்டர் சங்கர் தயார் சர்மா நின்று பொறுப்புக்கு வந்தார்.

1987 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்த பதவிக்குப் பதவி காலம் முடியும் முன்னர், முன்கூட்டியே நடைபெறும் தேர்தல் இதுவே ஆகும். இந்திய குடியரசுத் துணைத் தலைவர் பற்றி அரசியலமைப்புச் சட்டம் உறுப்புகள் 63 முதல் 68 வரையும் மற்றும் 71 உம் கூறுகின்றன. அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு (Article. 63) இந்தியாவுக்கு ஒரு குடியரசுத் துணைத் தலைவர் இருப்பார் என்றும், உறுப்பு 64இன் படி, அவர் பதவி வழியில் மாநிலங்களவையின் தலைவராக இருப்பார் என்றும், அவர் ஆதாயம் தரும் அலுவல் எதையும் கொண்டு இருத்தல் கூடாது என்றும் கூறுகிறது.

குடியரசுத் துணைத் தலைவராக பதவி வகிக்கும் ஒருவரை அல்லது மாநிலம் எதனின் ஆளுநர் அல்லது ஒன்றிய, மாநில அரசின் அமைச்சர் ஒருவர் அந்தப் பதவி காரணமாக அரசின் கீழ் ஆதாயம் பெறக்கூடிய ஓர் அலுவலில் இருப்பதாக கொள்ளக் கூடாது (... a person shall not be deemed to hold any office of profit by reason only that he is the President or Vice President of the Union or the Governor of any State or is a Minister either for the Union or for any State)

குடியரசுத் துணைத் தலைவர் தான் பதவியேற்ற தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் தொடர்ந்து பதவியில் இருப்பார். குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் பற்றி உறுப்பு 66 கூறுகிறது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார். குடியரசுத் துணைத் தலைவரின் தேர்தல் விகிதாச்சார முறைப்படியும், ஒற்றை மாற்று வாக்கின் அடிப்படையிலும் நடைபெறுகிறது. அத்தகைய தேர்தல் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தான் நடைபெறும். அவர் நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை ஆகிய எந்த அவையிலுமோ; மாநிலங்களின் எந்தச் சட்டமன்றத்திலுமோ உறுப்பினராக இருத்தல் கூடாது. அப்படி இருக்கும் போது குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்; அவர் குடியரசுத் துணைத் தலைவர் பதவி ஏற்ற தேதியிலிருந்து அந்த உறுப்பினர் பதவி வெற்றிடமானதாகக் கருதப் படும் என்று கூறுகிறது.

(...the members of both House of parliament in accordance with the system of proportional representation by means of the single transferable vote and the voting at such elections shall be by secret ballot.)

குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படத் தகுதி உடையவர் என்பதானது, இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும். 35 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும். மாநிலங்கள் அவைக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். ஒன்றிய அரசு அல்லது மாநில அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள அதிகார நிலையின் கீழ் ஆதாயம் பெறக்கூடிய ஏதேனும் அலுவலில் ஈடுபட்டு இருப்பவராகவும் இருத்தல் கூடாது. அவ்வாறு இருந்தால், அவர் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய தகுதியற்றவராகக் கருதப்படுவார் என்று அரசியல் அமைப்புச் சட்ட அமைப்பு உறுப்பு (Article66) குடியரசுத் துணைத் தலைவர் தகுதிக்கான தேர்தல் பற்றிக் கூறுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிற படி, நாடாளுமன்ற இரு அவை உறுப்பினர்கள் பதவி நீக்கும் படி வாக்களித்தால் அன்றே அவரை எந்த வகையிலும் நீக்க முடியாது. அவர் பதவியேற்ற தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் தொடர்ந்து பதவியில் செயல்படுவார் என்றாலும், தனக்கு விருப்பமில்லை என்று கருதி குடியரசுத் தலைவர் முகவரிக்கு எழுதிக் கொடுத்து விட்டு துணைத்தலைவர் பதவியில் இருந்து விலகலாம்;

அதுபோல், மாநிலங்களவையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் இயற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை மக்களவை ஏற்றுக் கொண்டால், குடியரசுத் துணைத் தலைவர் ஒருவரைப் பதிவிலிருந்து நீக்கலாம்; அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான எண்ணத்தை பதினான்கு நாட்களுக்குக் குறைவில்லாமல் அறிவிப்பு கொடுக்கப்பட்டால் அன்றி; இந்தப் பிரிவில் அந்த நோக்கத்தின் பொருட்டான தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது. குடியரசுத் துணைத் தலைவரின் பதவி காலம் முடிந்த பிறகும், அவரே அடுத்து வருகின்ற குடியரசுத் துணைத் தலைவர் பதவி ஏற்கும் வரையில், அவர் தொடர்ந்து பதவியில் இருப்பாரென அரசியல் அமைப்புச் சட்ட உறுப்பு 67 அனுமதிக்கிறது.

குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பு வெற்றிடமான இடத்தை நிரப்புவதற்கான தேர்தலுக்குரிய கால அளவும், தற்செயலாக வெற்றிடமான அந்த பதவியிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரின் பதவி காலமும் பற்றி உறுப்பு 68 கூறுகள் (1), (2) (Time of holding election to fill vacancy in the office of vice president and the term of office of person elected to fill casual vacancy) தெளிவுப்படுத்துகின்றன.

இந்திய குடியரசுத் தலைவர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஏதேனும் ஒரு காரணத்தால், (In the event of the occurrence of any vacancy in the office of the President by reason of his death, resignation or removal or otherwise, the Vice President shall act as President until date on which a new President elected.....) அவரின் பதவி இடம் வெற்றிடம் ஏற்படும்போது, அந்த இடத்தை நிரப்புகிற வரையில் குடியரசுத் துணைத் தலைவர் குடியரசுத் தலைவராகச் செயல்படுவார். உடல் நலமில்லாமல் ஏதேனும் காரணத்தால் குடியரசுத் தலைவர் தமது பதவியை ஆற்றவியலாது இருக்கும் பொழுது, குடியரசுத் தலைவர் மீண்டும் தமது பணியைத் தொடங்குகிற வரையில், துணைக் குடியரசுத் தலைவரே அப்பணியை ஆற்றுவார் என்றும், அப்படி பணியாற்றுகிற காலக் கட்டங்களில் அல்லது அலுவல்களைச் செயலாற்றுகையில் குடியரசுத் தலைவர்க்குரிய அனைத்து விதமான அதிகாரங்களும் (powers), காப்புரிமைகளும் (immunities) கொண்டிருப்பார் என்றும், நாடாளுமன்றம் சட்டத்தால் நிர்ணயம் செய்துள்ள ஊதியங்கள், (emluments) படித்தொகைகள், (allowances) மற்ற சலுகைகள் (and previleges) பெற அவர் உரிமை உடையவர் ஆவார் என்றும் அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்பு 65 துணைக் குடியரசுத் தலைவருக்குவாய்ப்புத் தந்துள்ளது.

குடியரசுத் தலைவர் போலவே, குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் தொடர்பாக எழும் சந்தேகங்கள், தகராறுகளை உச்ச நீதிமன்றம் விசாரித்து முடிவு செய்ய அதிகாரம் உண்டு. அதில் நீதிமன்ற முடிவே இறுதியானதாகும். மேலும், குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தால், அவர் அதிகார நாளில் அறிவித்து வழங்கிய அனைத்து உத்தரவுகளும் செல்லாமல் (...the Supreme Court shall not be invalided) போய்விடாது.

நாடாளுமன்றம், தேர்தல் சம்பந்தமாக ஒழுங்கு முறையை ஏற்படுத்தலாம். குடியரசுத் தலைவர் போல், குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் போது, அவரைக் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் குழுமத்தில் உறுப்பினர்கள் இடம் வெற்றிடமாக இருந்தன என்பதைக் காரணம் காட்டி, பிரச்சனை எதையும் எழுப்ப முடியாது. நீதிமன்றத்தால் குற்றம் எதிலும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டவருக்கு வழங்கிய தண்டனைக்கு மன்னிப்பு வழங்கவோ, தண்டனையை நீக்கவோ, குறைக்கவோ, மாற்றவோ (power to grant pardons, reprives, respites or remissions of punishment or to suspend, remit or commute the sentence of any person Convicted of any offence..) குடியரசுத் தலைவர் போல் குடியரசுத் துணைத் தலைவருக்கு அதிகாரம் ஏதும் வழங்கப்பட இல்லை.

இவர் மாநிலங்கள் அவைத் தலைவர் எனினும், இவருக்கு வாக்களிக்க உரிமையில்லை. காரணம், இவர் இராஜ்ய சபா எம்.பி.யும் அல்லர் எனினும், வாக்கு சமநிலையில் இருக்கும் போது, வாக்களிக்க வாய்ப்பு உண்டு.

இந்நிலையில்தான் இப்படிப்பட்ட குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் இடைக்காலத்தில் நடைபெற உள்ளது.

ஒன்றியத்தில் ஆளும் தே.ஜ. கூட்டணியின் துணைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, இராஜ்நாத் சிங், நட்டா ஆகியோரின் ஒப்புதலோடு தமிழ் நாட்டைச் சேர்ந்தவரும், தற்போதைய மராட்டிய ஆளுநருமான சி.பி. இராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார். திருப்பூரில் பிறந்த இவர்; இளம் வயதிலேயே ஆர்.எஸ்.எஸ். சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றி வந்தவர். 1998, 1999 ஆண்டுகளில் கோவை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தமிழ்நாடு பாஜகவின் செயலாளராக இருந்தவர். ஜார்கண்ட், தெலுங்கானா, போன்ற மாநிலங்களில் கூடுதல் ஆளுநராகவும், புதுவை துணைநிலை ஆளுநராகவும் இடைக்காலத்தில் பொறுப்பேற்றிருந்தவர்.

இவரை எதிர்த்து வேட்பாளர் ஒருவரை நிறுத்த டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில்மேலிட தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. காங்கிரசு, தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஆம் ஆத்மி, சிவசேனா, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி பொதுவேட்பாளராக, அரசியல் கட்சியைச் சாராத ஒருவரான தெலுங்கானாவைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஒருங்கிணைந்த ஆந்திராவில் சுதர்சன் ரெட்டி திருச்சி 1946 இல் அரங்கா ரெட்டி மாவட்டத்தில் பிறந்தவர். உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை முடித்த இவர்; வழக்கறிஞர் பணியில் அனுபவம் பெற்றவுடன் 1988 – 90 வரை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர், அதே உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகவும், பின்னர் 2005 அசாமில் குவஹாத்தி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாகவும், 2007 ஜனவரி முதல் 2011 ஜூலை வரை உச்சநீதி மன்ற நீதிபதியாகவும் பணி செய்து ஓய்வு பெற்றவர். உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் சட்ட ஆலோசகராக இருந்தவர்; இவர் உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்த போது, பல்வேறு வழக்குகளில் முக்கிய தீர்ப்புகள் வழங்கிப் புகழ் படைத்தவர். 2013 இல் கோவாவின் முதல் “லோக் ஆயுக்தா” வின் தலைவராகவும் இருந்து செயல்பட்டவர்.

இந்தியா கூட்டணி வேட்பாளராக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சுதர்சன் ரெட்டி தமிழ்நாட்டுக்கு வந்து, தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசி ஆதரவு கேட்டுத் திரும்பி உள்ளார். அதைப்போல மாநிலங்கள் முழுவதும் சென்று இந்தியா கூட்டணி தலைவர்கள் மற்றும் எம்.பி.க்கள் ஆதரவு திரட்டி வருகிறார்.





கவிஞர்
**தமிழ்தாசன்**
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்


“ஒரு நீதிபதியாக அரசியல் அமைப்புச் சட்டத்தை பாதுகாப்பின் துணை ஜனாதிபதியாக நாட்டுக்கு சேவை செய்யும் ஒரு வாய்ப்பு கிடைத்தால் இந்திய அரசியல் சாசனத்தை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுவேன். தற்போது அது அச்சுறுத்தல் நெருக்கடியில் இருக்கிறது. ஆளுங்கட்சி சார்பில் போட்டியிடும் சி.பி. ராதாகிருஷ்ணன் ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர் ஆனால் நான் அந்த சித்தாந்தத்தை சாராதவன் அதிலிருந்து வெகு தூரம் விலகி இருக்கிறேன்.

“என்னை நக்சலைட் ஆதரவாளர் என்று அமித்ஷா கூறுகிறார். மாவோஸ்ட் விவகாரத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு 40 பக்கங்களைக் கொண்டது. அதை முழுதும் உள்துறை மந்திரி அமித்ஷா படித்து விட்டு பேச வேண்டும். படித்திருந்தால் நான் நக்சலைட்டுகளை ஆதரிப்பவர் என்று கூறியிருக்க மாட்டார்!. மேலும், அந்தத் தீர்ப்பை நான் தான் எழுதினேன்; ஆனால், அந்தத் தீர்ப்பு என்னுடையது அல்ல; வழங்கியது உச்ச நீதிமன்றம் என்பதை அவர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்!...” என்று அமித்ஷா கூட்டத்துக்குப் பதிலடி கொடுத்துள்ளார் சுதர்சன் ரெட்டி.

அ.தி.மு.க.வை பா.ஜ.க.விடம் அடகு வைத்து, தமிழக நலன்களை ஆழக் குழி தோண்டிப் புதைத்துக்



கொண்டிருக்கிற எடப்பாடி, இது குறித்து திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்தார். “தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை அறிவித்ததற்குப் பெருமை. ஆகவே, கட்சிப் பேதமின்றி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அதைப் போல பொண்ணு ஊருக்கு புதுசு போல, பா.ஜ.க.வில் புதிய தலைமைப் பொறுப்பேற்று இருக்கும், தமிழ்நாடு தலைவர் நைனார் நாகேந்திரன்களும், தமிழிசைகளும் சி.பி. இராதாகிருஷ்ணனைப் புத்தன், இயேசு, காந்தியாரைப் போல வேண்டுகோள் வைத்து விளம்பரம் தேடி உள்ளனர்.

ஒரு தமிழரை ஆதரிக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமியும்கூறுகிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் தான் ஆர். வெங்கட்ராமன். கலைஞர் தலைமையிலான திமுக ஆட்சியைச் சட்டம் ஒழுங்கு சரியில்லை என அபாண்டமாகப் பழி சுமத்தித் தமிழ்நாடு ஆளுநர் பர்னாலா ஒப்புதல் இல்லாமலேயே (otherwise) எனும் வார்த்தை இடம் பெற்ற மாநிலங்களில் அரசியலமைப்பு இயந்திரம் செயல்படாமல் தவறும் தறுவாயில் வகையங்கள்எனும் 356 அரசியல் அமைப்புச் சட்ட உறுப்பைப் பயன்படுத்தி, 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கலைத்த வரலாறு உண்டு.

எனவே, துணை ஜனாதிபதி ஆக இருப்பவர் தமிழரா? இல்லையா? என்பது அல்ல. கருத்தியல் அடிப்படையில் தான் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவில் இல்லாத சமஸ்கிருத மொழிக்கு ரூ.2,650 கோடி என அதிக நிதி ஒதுக்கீடு செய்து, ஆனால், உலகின் தொன்மையான, முதல், மூத்த மொழியான தமிழ் மொழிக்கு வெறும் 172 கோடி மட்டும் பா.ஜ.க. ஆட்சியில் ஒதுக்கீடு செய்தது நினைவில்லையா இந்தி மொழி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதும், சமஸ்கிருதத்தை வளர்ப்பதும் எந்த விதத்தில் நியாயம்? திருக்குறள் மாநாடு நடத்தித் தமிழுக்கு பெருமை சேர்த்தவரும், தமிழ் மொழியை அழிக்கத் திணிக்கப்பட்ட இந்தி மொழியை எதிர்த்து பெல்லாரி உட்படப் பல வேறு சிறைகளில் அடைபட்டுக் கிடந்தவரான தந்தை பெரியார்; அவர் பேசிய செய்தியை முழுமையாக வெளியிடாமல், வெட்டியும், குறைத்தும் பெரியாரை இழிவுப் படுத்திப் பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு எதிராக ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசிய பேச்சு மறந்துவிட முடியுமா?

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் “தமிழர்கள் நாகரிகமற்றவர்கள்” எனத் தமிழரைப் பற்றிக் கொச்சைப்படுத்திப் பேசிய பேச்சு என்ன அவ்வளவு நாகரிகமானதா? தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவி மூலம் தமிழ், தமிழர், திராவிடம், திராவிடர் பற்றித் தொடர்ந்து இழிவுப்படுத்தி வருவதோடு; தமிழ்நாட்டு மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களுக்குப் போடப்படும் சட்டமன்றத் தீர்மானங்கள், சட்ட மசோதாக்கள் போன்றவற்றை உரிய காலத்தில் ஒப்புதல் தராமல் கிடப்பில் போட்டுத் தடுத்து நிறுத்தி வருவதையும் ஏற்க முடியுமா? இவை போன்ற அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான செயலைத் தொடர்ந்து ஊக்கப்படுத்திடக் காரணமானவர்கள் யார்? பாஜகவை சேர்ந்த ஒன்றிய அமைச்சர் ஷோபா, “கருநாடகத்தில், தமிழ்நாட்டிலிருந்து வந்து தமிழன் வெடிகுண்டு வைக்கிறான்” என்று அபாண்டமாகக் கொலைப் பழிச் சுமத்தித் தமிழர்களைப் பேசியது மறந்து விட்டதா?

அதற்கு எந்த பாஜக தலைவராவது கண்டனம் தெரிவித்தது உண்டா? “பூரி ஜெகநாதர் கோயில் புதையல் சாவி தமிழ்நாட்டுக்குச் சென்று விட்டது” என்று பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, இராஜநாத் சிங் போன்றோர்தேர்தலின் போது பேசி, தமிழர்களைத் திருட்டுப் பட்டம் சூட்டி இழிவுப்படுத்தியது எல்லாம் நினைவில்லையா? தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய கல்வி நிதி ரூபாய் 2,152 கோடி ரூபாய் தரப்படாமலும், வறட்சி, புயல், மழைக் காலப் பாதிப்பு போன்ற இயற்கை இடர்பாடுகளுக்குத் தர வேண்டிய உரிய நிதியை இன்னும் தராமல் நிறுத்தி வைத்துள்ளதையும், அடிக்கல் நாட்டிய எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியைக் கட்டப்படாமல் கைவிட்டதையும்,

கீழடி நாகரிகத் தொல்பொருள் ஆய்வுக்கு அங்கீகாரம் வழங்கப்படாமல், அங்குப் பணியாற்றிய அதிகாரியை மாற்றிப் பந்தாடி அநீதி செய்து வருவதையும்; இவை போன்ற தமிழ், தமிழன், தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதுமான அநீதி செயல்கள் செய்து வருகிற மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி இல்லையா? தேசிய ஜனநாயகக் கூட்டணியில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பா.ஜ.க. சேர்ந்த சி.பி. இராதாகிருஷ்ணன் தமிழ்நாட்டுக்குத் தொடர்ந்து துரோகம் செய்து வரும் பாஜக தலைமையை என்றாவது கண்டித்தது உண்டா? தமிழ்நாட்டுக்கான உரிமை பற்றி கேட்டதுண்டா? இவரை எப்படித் துணை ஜனாதிபதி பொறுப்புக்குத் தேர்ந்தெடுப்பதற்கான ஆதரவு தெரிவிக்க முடியும்?

தற்போது மக்களவை (லோக்சபா) உறுப்பினர்களும், மாநிலங்களவை (இராஜ்ய சபா) உறுப்பினர்களும், நியமன உறுப்பினர்களும் வாக்களிக்கத் தகுதி படைத்தவர்கள் . இரு அவையின் உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கை 788 பேர். 7 இடங்கள் வெற்றிடங்களாக உள்ளன. தற்போது உள்ள 781 பேர் உள்ள அவர்கள் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கலாம். வெற்றி பெறுவதற்கு இதில் பாதிப் பேர்க்கு மேல் ஆதரவு தேவை என்பதால், 391 எம்.பிக்கள் வாக்குகள் போதும். ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிக்கு லோக்சபா, இராஜ்யசபாவில் 422 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இந்தியா கூட்டணியைச் சேர்ந்த எதிர்க்கட்சியில் இரு அவையிலும் 313 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் பாஜக ஆதரவு பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுவார் என்றாலும்; கருத்தியல் அடிப்படையில், இந்தியா கூட்டணி போட்டியிடுவதைத் தவிர்க்கவியலாது. சர்வாதிகார காட்டாட்சி நடத்தி வரும் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக கூட்டணி ஆட்சியின் ஜனநாயக அத்துமீறலை, மதவெறி பிடித்த இந்துத்துவா போக்கை, பாராளுமன்ற நெறிமுறைகளைக் கல்லறை கட்டி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே சீர்குலைக்கும் பாசிசப் போக்கை எதிர்த்துத் தான் “இந்தியா கூட்டணி “தனது வேட்பாளர் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சுதர்சன் ரெட்டியை நிறுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பது என்பது நம் உரிமை!

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் என்பது நம் கடமை!